

# நாம இராமாயணம் (தமிழ்)

# முன்னுரை

"ஶுத்த பிரம்ம பராத்பர ராம" என்று போற்றப்படும் "நாம ராமாயணம்" என்பது, ஶ்ரீராமபிரானின் புனிதமான திருநாமங்கள் மற்றும் திருக்கல்யாண குணங்களைக் கூறும் ஒரு உன்னதமான படைப்பு ஆகும். சனாதன தர்மத்தின் இணையில்லா இரு இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தின் ஆன்மீக சாரமாய், ஶ்ரீராமபிரானின் வாழ்வு, காலவரிசைப்படியான முக்கிய நிகழ்வுகள் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிய 108 ஸ்லோகங்களைக் கொண்ட ஒரு பக்திப் பாமாலையாகும்.

இதனை இனிமையான மற்றும் எளிமையான தமிழில் எழுத முயற்சி செய்துள்ளேன். மூல நாம இராமாயத்தில் ஒவ்வொரு வரியும் “ராம் (राम् )” என்று நிறைவு பெறும். தமிழில் இராமனை “ராம்” என்று கூறலாகாது ஆதலால் (ராம ராம ஜெய ராஜாராம்; ராம ராம ஜெய சீதாராம் தவிர்த்து), ஶ்ரீராமபிரானின் நாமத்தை ஒவ்வொரு வரியிலும் “வந்தா**ராம்**”, “அருளினா**ராம்**”, “துதித்தன**ராம்**” என எழுத எத்தனித்துள்ளேன்.

அடியேன் எழுத்தில் ஏதேனும் பிழைகள் இருப்பின், சான்றோர்களும் எம்பெருமானும் அடியேனின் அறியாமையைப் பொறுத்து அருள் புரிய வேண்டுகிறேன்.

-குமரன் வெங்கடராமன்
kumaran.venkataraman@gmail.com

## பால காண்டம்

1. உலகம் உய்ய உதித்தவ**ராம்**
2. திலகமாய் இரகுகுலத்தில் வந்தவ**ராம்**
3. அரவத்தின் மீது துயில் கொள்பவ**ராம்**
4. பிரமனும் அமரரும் துதித்தன**ராம்**
5. இரவிகுலம் சிறக்கப் பிறந்தவ**ராம்**
6. அரசர் தசரதர் தவபுத்திர**ராம்**
7. கோசலை மகவாய் வந்தவ**ராம்**
8. கௌசிகர் மெச்சிடும் மாணவ**ராம்**
9. கோர தாடகையை வதைத்தவ**ராம்**
10. மாரிசாதனை வென்றவ**ராம்**
11. கௌசிகர் யாகம் காத்தவ**ராம்**
12. அகலிகை துயரம் துடைத்தவ**ராம்**
13. கௌதம முனிவரும் பணிந்தா**ராம்**
14. தேவரும் முனிவரும் துதித்தன**ராம்**
15. நாவாய் வேட்டுவரும் நாடின**ராம்**
16. ஜனகரின் சிந்தை கவர்ந்தவ**ராம்**
17. மனங்கவர் மைதிலி கண்டவ**ராம்**
18. அரனார் வில்லினை உடைத்தவ**ராம்**
19. பிராட்டியாம் சீதையை மணந்தவ**ராம்**
20. பரசுராமர் செருக்கை அழித்தவ**ராம்**
21. திருமண கோலத்தில் நின்றவ**ராம்**
22. பெருமைகொள் அயோத்தியை ஆண்டவ**ராம்**

## அயோத்தியா காண்டம்

23. பலநற் பண்புகள் கொண்டவ**ராம்**
24. நிலமகள் நினைவினில் நின்றவ**ராம்**
25. சந்திரஒளிர் முகம் கொண்டவ**ராம்**
26. தந்தை சொல்லிட வனமேகின**ராம்**
27. வேட்டுவ குகனும் சரணடைந்தா**ராம்**
28. காட்டினில் அவரொடு ஐவரானவ**ராம்**
29. சித்திரகூட வாசம் செய்தவ**ராம்**
30. அத்திரி முனியை பணிந்தவ**ராம்**
31. பெற்றவர் மனமெல்லாம் நிறைந்தவ**ராம்**
32. சிற்றன்னை புதல்வரும் வேண்டின**ராம்**
33. புதல்வராய் கடமையைச் செய்தவ**ராம்**
34. பரதற்கு பாதுகை அளித்தவ**ராம்**

## ஆரண்ய காண்டம்

35. தண்டக வனத்தைக் காத்தவ**ராம்**
36. வண்செய் அசுரரை வதைத்தவ**ராம்**
37. தகவொடு இருமுனி வணங்கின**ராம்**
38. அகத்தியர் அருளைப் பெற்றவ**ராம்**
39. ஜடாயு தொழுது நின்றா**ராம்**
40. அடவிப் பஞ்சவடி அமர்ந்தவ**ராம்**
41. அரக்கியின் செருக்கை அழித்தவ**ராம்**
42. கரதூஷனர்களை வென்றவ**ராம்**
43. எழில்கொஞ்சும் மான்தேடி ஏகின**ராம்**
44. அழிவில்லா அம்பு மாரீசற்கு எய்தவ**ராம்**
45. காட்டினில் சீதையை தேடின**ராம்**
46. வீட்டினை ஜடாயுவிற்கு அருளின**ராம்**
47. சபரியின் கனிகளைப் புசித்தவ**ராம்**
48. கபந்தனின் கரங்களைத் துணிந்தவ**ராம்**

## கிஷ்கிந்தை காண்டம்

49. அனுமன் வந்து பணிந்தா**ராம்**
50. வானர சுக்ரீவனும் தொழுதா**ராம்**
51. பாதகன் வாலியை வதைத்தவ**ராம்**
52. தூதாய் அனுமனைப் பணித்தவ**ராம்**
53. மதவேள் இலக்குவனொடு நின்றவ**ராம்**

## சுந்தர காண்டம்

54. மாருதி மனத்தில் புரித்தவ**ராம்**
55. தன்பக்தரின் துயரைத் துடைப்பவ**ராம்**
56. ஜானகி ஜீவனைக் காத்தவ**ராம்**
57. தசமுகன் செருக்கினைத் தீர்த்தவ**ராம்**
58. அச்சமில் அனுமனுக்கு அருளியவ**ராம்**
59. காகம் தீண்டியதை உரைத்தவ**ராம்**
60. நிகரில் மணியைத் தந்தவ**ராம்**
61. அனுமன் சொல்கேட்டு அகமகிழ்ந்தவ**ராம்**

## யுத்த காண்டம்

62. இலங்கை வேந்தனை வெல்ல ஏகின**ராம்**
63. சலத்தினை கணைகளால் சுருக்கின**ராம்**
64. பலங்கொள் வானரர்சூழ நின்றவ**ராம்**
65. குலவீபிடணனுக் கபயம் அளித்தவ**ராம்**
66. கற்கொண்டு பாலம் சமைத்தவ**ராம்**
67. விற்கொண்டு கர்ணந்தலை துணிந்தவ**ராம்**
68. அலகிலா அரக்கர் படையை அழித்தவ**ராம்**
69. மயிலகி ராவணர்களைக் கொன்றவ**ராம்**
70. தசமுக இராவணனை வதைத்தவ**ராம்**
71. ஈசனும் பிரமனும் போற்றியவ**ராம்**
72. மேதினி பாரம் குறைத்தவ**ராம்**

73. மைதிலி கண்டுமனம் மகிழ்ந்தவ**ராம்**
74. வீடணனுக்கு இலங்கை அளித்தவ**ராம்**
75. விடைபெற்று அயோத்தி ஏகியவ**ராம்**
76. பரத்துவாசர் பாதம் பணிந்தவ**ராம்**
77. பரதற்கு பேருவகை தந்தவ**ராம்**
78. இணையில் அயோத்தி ஆண்டவ**ராம்**
79. அனைவரும் சமமென கொண்டவ**ராம்**
80. புனைமணி அரியணை அமர்ந்தவ**ராம்**
81. இணையிலா மகுடம் அணிந்தவ**ராம்**
82. பரந்த நிலமன்னரும் போற்றின**ராம்**
83. அரங்கனை வீடணனுக்கு ஈந்தவ**ராம்**
84. குரங்குகள் குலத்திற்கு அருளியவ**ராம்**
85. சகல உயிர்களையும் காப்பவ**ராம்**
86. அகிலம் அனைத்தும் ஆள்பவ**ராம்**

## உத்தர காண்டம்

87. தவங்கொள் முனிவரும் போற்றின**ராம்**
88. புவனமெங்கும் புகழ் பெற்றவ**ராம்**
89. இரமையின் இனிமையில் இரமித்தவ**ராம்**
90. பிறழா நீதிநிலை நாட்டியவ**ராம்**
91. மண்மகளை வனத்திற்கு உய்த்தவ**ராம்**
92. விண்சென்ற சம்புகனும் துதித்தவ**ராம்**
93. இலவணனை தனயன்கொண்டு அழித்தவ**ராம்**
94. இலவகுசரால் உவகை கொண்டவ**ராம்**
95. அலகிலா வேள்விகள் செய்தவ**ராம்**
96. காலன் வரவறிந்து விண்ணேகியவ**ராம்**
97. மண்ணுலகோருக்கு முத்தி தருபவ**ராம்**
98. விண்ணவர் போற்றிட விளங்கியவ**ராம்**
99. உயர்சோதி வடிவாய் உயர்ந்த்தவ**ராம்**
100. அயர்வுறும் பிறவிப்பிணி அறுப்பவ**ராம்**
101. தருமத்திற்கு உவமை ஆனவ**ராம்**

102. கருணைக் கடலென முத்தி தருபவ**ராம்**
103. அறியா உயிர்களையும் காப்பவ**ராம்**
104. பிறவிப் பிணிகளைத் தீர்ப்பவ**ராம்**
105. சத்திய லோகத்தில் வசிப்பவ**ராம்**
106. நித்தியமாய் பக்தர்களுக்கு அருள்பவ**ராம்**
107. **ராம ராம ஜெய ராஜாராம்**
108. **ராம ராம ஜெய சீதாராம்**

**|| சுபம் ||**